**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.274/2019** **Date:16.12.2022**
**(P.W– 1)**

திரு.வேலுசாமி
<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து மற்றும் கட்டிடங்கள் எந்த காலை எண் என்று கேட்டால், 182/2B ஆகும். அதில் உள்ள கட்டிடங்கள் எந்த திசையை பார்த்தது என்று கேட்டால், வடக்கு திசையை பார்த்தது. வடபுறம் ஓடு போட்டதும், தென் புறம் சிமெண்ட் சீட் போட்டதும் ஆகும். சிமெண்ட் சீட் கட்டிடம் கிழமேல் தென்புறம் 35 அடி என்று சொன்னால், சரியில்லை 21 அடி ஆகும்.

2. ஓட்டு கட்டிடம் கிழபுறமாக தென்வடல் எவ்வளவு என்று கேட்டால், 27 அடி ஆகும். ஓட்டு கட்டிடம் வடபுறமாக கிழமேல் எவ்வளவு அளவு என்று கேட்டால், 27 அடி ஆகும். சிமெண்ட் சீட் கட்டிடம் கிழபுறமாக தென்வடல் எவ்வளவு அளவு என்று கேட்டால், 10 அடி ஆகும். மொத்த கட்டிடத்தின் பரப்பளவு எத்தனை சதுர அடி விஸ்திரனத்தில் உள்ளது என்று கேட்டால், சரியாக தெரியாது.

3. கட்டிடத்தின் தென்புறமாகவும், மேபுறமாகவும் காலி இடமாக அனுபவிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. நான் சொல்வது போல கட்டிட அளவுகள் தவறு என்றும், காலி இடம் உள்ளது என்றும் சொன்னால், சரியில்லை. மொத்த காலியிடம் 3471 சதுர அடியை அனுபவிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 1492 சதுர அடி உள்ளது என்றும் சொன்னால், சரியில்லை.

4. எந்த வருடம் எவ்வளவு வாடகைக்கு வந்தேன் என்றால், 1984 ல் மாதத்திற்கு 15 ரூபாய் வாடகைக்கு வந்தேன். 1992 லிருந்து 1994 வரை மாத வாடகை ரூபாய் 30 என்றால் சரிதான். 1995 லிருந்து 1996 வரை மாத வாடகை 90 ரூபாய் என்ற சொன்னால், சரியில்லை 70 ரூபாய் ஆகும். 1997 வது வருடம் எவ்வளவு வாடகை என்றால், மாதம் ரூபாய் 170 ஆகும். 1998 முதல் 2000 வரை மாத வாடகை எவ்வளவு என்றால், ரூபாய் 300 ஆகும்.

5. 2001 முதல் 2003 வரை மாத வாடகை எவ்வளவு என்றால், ரூபாய் 300 ஆகும். 2001 முதல் 2003 வரை மாத வாடகையாக நான் சொல்வது போல 300 கொடுக்கவில்லை என்றும், ரூபாய் 200 தான் கொடுத்தேன் என்றால், சரியில்லை. 2004 முதல் 2007 வரை மாத வாடகை எவ்வளவு என்றால், ரூபாய் 300 கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல ரூபாய் 300 கொடுக்கவில்லை என்றும், ரூபாய் 220 தான் கொடுத்தேன் என்றால், சரியில்லை. 2008 முதல் 2010 வரை மாத வாடகை எவ்வளவு என்றால், ரூபாய் 300 ஆகும்.

6. 2008 முதல் 2010 வரை மாத வாடகையாக ரூபாய் 250 தான் கொடுத்தேன் என்றால், சரியில்லை. 2011 முதல் 2013 வரை மாத வாடகை எவ்வளவு என்றால், ரூபாய் 450 ஆகும். 2011 முதல் 2013 வரை மாத வாடகையாக ரூபாய் 275 தான் கொடுத்தேன் என்றால், சரியில்லை. 2014 ஆம் ஆண்டு வாடகை என்ன என்றால், 2014 முதல் வாடகையை செலுத்தவில்லை ஆனால் 2019 ஆம் வருடம் 2 முறை தலா 10 ஆயிரம் செலுத்தியுள்ளேன்.

7. நான் 2014 வரை சரியாக மாதம் மாதம் வாடகை செலுத்தவில்லை என்றால், சரியில்லை. பல முறை கேட்ட பிறகு அவ்வபோது தான் சில தொகையை வாடகையாக கொடுத்து வந்தேன் என்றால், சரியில்லை. 2014 ஆம் வருடம் நியாய வாடகை நிர்ணயித்தார்கள் என்றால், நிர்ணயித்தார்கள் நான் செலுத்தவில்லை. அரசு ஆணையின் அடிப்படையில் நில மதிப்பையும், கட்டிடத்தின் மதிப்பையும் கணக்கில் வைத்து நியாய வாடகை நிர்ணய குழு வாடகையை நிர்ணயம் செய்தது என்று சொன்னால், சரியில்லை.

8. நியாய வாடகையை 2011 ஆம் வருடத்திலிருந்து செலுத்த கோரி அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால், சரியில்லை. வாடகை பாக்கியை நேரில் கேட்டது போக அவ்வபோது அறிவிப்பும் கொடுத்தார்கள் என்றால், அறிவிப்பு கொடுக்கவில்லை. 05.01.2015 ஆம் தேதியன்று வாடகை பாக்கியை நிர்ணயம் செய்த அட்டவணையிட்டு கணக்கிட்டு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால், சரியில்லை.

9. எனக்கு கொடுத்த அறிவிப்பை கையொப்பம் போட்டு வாங்கிவிட்டு தற்போது பொய் சொல்கிறேன் என்றால், சரியில்லை. 07.12.2019 ஆம் தேதி வாடகை பாக்கிகாக ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால், சரியில்லை. அறிவிப்பு கொடுத்தார்கள் என்றும், நான் அறிவிப்பை வாங்கிவிட்டு பொய் சொல்கிறேன் என்றால், சரியில்லை.

10. 07.12.2019 ஆம் தேதி ரூபாய் 3,56,252/– வாடகை பாக்கி செலுத்த கோரி அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால், அறிவிப்பு கொடுக்கவில்லை. ஆனால் தொகையை செலுத்த சொன்னார்கள் நான் செலுத்தவில்லை. 07.12.2019 ஆம் தேதிய அறிவிப்பை தபால் வழியாக அனுப்பினார்கள் என்றும் அதை நான் கையொப்பம் போட்டு பெற்றுக்கொண்டு தற்போது பொய் சொல்கிறேன் என்றால், சரியில்லை. .

11. வாடகை நிர்ணயம் செய்தது சரியில்லை என்று மேல்முறையீடு செய்யவில்லை என்றால், சரிதான். வாடகை கொடுக்காமல் கோவில் இடத்தை அனுபவிக்கவேண்டி பொய்யாக வழக்க போட்டுள்ளேன் என்றால், சரியில்லை. அரசாங்கம் நிர்ணயிக்கு வாடகையை செலுத்த கடமை பட்டவனா என்று கேட்டால், கடமைபட்டவன் தான். அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டி வாடகை செலுத்தாமல் பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால், சரியில்லை.

12. பல வருடமாக வாடகை செலுத்தாமல் கட்டிடத்தில் இருக்க உரிமை இல்லை என்றால், நான் வாடகை கொடுத்து வருகிறேன். நான் 2014 லிருந்து 2019 வரை 2 முறை தான் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் ரூபாய் 20 ஆயிரம் செலுத்தியுள்ளேன் என்றும், எனக்கு கட்டிடத்தில் இருக்க அருகதையில்லை என்றும் சொன்னால், சரியில்லை. அரசு நிர்ணயித்துள்ள வாடகையை நான் செலுத்த கடமைபட்டுள்ளேன் என்று சொன்னால், நான் செலுத்தி வந்த ரூபாய் 450 ஐ செலுத்த தயாராக உள்ளேன். நான் பொய் வழக்கு போட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.